பிரஸார் பாரதி

அகில இந்தியவானொலி, சென்னை-4

14 08 2022 **SUNDAY** 6 30**PM**

வணக்கம். ஆல் இண்டியாரேடியோசென்னை- மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1) நாட்டின் 76வது சுதந்திரதினத்தைஒட்டி, குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதிமுர்மு இரவு 7 மணிக்குநாட்டுமக்களுக்குஉரையாற்றுகிறார்.

2) இல்லந்தோறும் தேசியக்கொடிஏற்றும் இயக்கத்திற்குபொதுமக்கள் அளித்துவரும் பிரமாண்டமானவரவேற்பு தமக்குமகிழ்ச்சிஅளிப்பதாகபிரதமர் திரு. நரேந்திரமோடிகூறியுள்ளார்.

3) தில்லிசெங்கோட்டையில் பிரதமர் நாளைதேசியக்கொடியைஏற்றிவைத்து, சுதந்திரதினஉரையாற்றவுள்ளார்.

4) சென்னையில் முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் புனித ஜார்ஜ் கோட்டையில் தேசியக்கொடியைஏற்றிவைக்கவுள்ளார்.

5) தமிழகதீயணைப்புத்துறைவீரர்கள், சிறைத்துறையினர் மற்றும் ஊர்க்காவல் படைவீரர்களுக்குகுடியரசுத் தலைவர் பதக்கங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

>>>><<<<

நாட்டின் 76வது சுதந்திரதினத்தைமுன்னிட்டுகுடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதிமுர்மு இன்று இரவு ஏழு மணிக்குஅகில இந்தியவானொலிமற்றும் தூர்தர்ஷன் மூலம் நாட்டுமக்களுக்குஉரையாற்றுகிறார்.

குடியரசுத் தலைவரின் உரையைத் தொடர்ந்துஅதன் ஆங்கிலமொழிபெயர்ப்பு இடம் பெறும்.

இரவு ஒன்பதரைமணிக்குகுடியரசுத் தலைவர் உரையின் தமிழாக்கத்தைசென்னைவானொலிஒலிபரப்புகிறது.

தமிழகத்தில் உள்ளஅனைத்துவானொலிநிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

குடியரசுத் தலைவர் உரையைமுன்னிட்டு, இன்றிரவு 7.15 மணிக்குஒலிபரப்பாகவேண்டியதமிழ்ச் செய்திஅறிக்கை இரவு 9 மணிக்குஒலிபரப்பாகும்.

>>>><<<<

நாடுமுழுவதும் 3 நாட்கள் தேசியக்கொடியைஏற்றவேண்டும் என்றமத்தியஅரசின் அழைப்புக்குபொதுமக்களிடம் பிரமாண்டமானவரவேற்பு காணப்படுவதுமகிழ்ச்சியளிப்பதாகபிரதமர் திருநரேந்திரமோடிகூறியுள்ளார்.

இது தொடர்பாகஅவர் வெளியிட்டுள்ளட்விட்டர் பதிவில், நாடுமுழுவதும் அனைத்துதரப்பு மக்களும் இந்த இயக்கத்தில் உற்சாகமாக பங்கேற்றுவீடுகளில் கொடியேற்றியிருப்பதாககுறிப்பிட்டுள்ளார்.

இந்த இயக்கத்திற்கு பங்களிப்பைவழங்கிய இளைஞர்கள் உள்ளிட்டஅனைவருக்கும் தாம் பாராட்டுதெரிவிப்பதாகபிரதமர் தெரிவித்துள்ளார்.

தங்கள் வீடுகளில் ஏற்றப்பட்டதேசியக்கொடியுடன் புகைப்படங்களை**HarGhar Tiranga.com**வலைதளபக்கத்தில் பகிர்ந்துகொள்ளுமாறுதிரு. நரேந்திரமோடிகேட்டுக்கொண்டுள்ளார்.

>>>><<<<

நாட்டின் 76வது சுதந்திரதினம் நாளைகொண்டாடப்படுவதைஒட்டி, பிரதமர் திரு. நரேந்திரமோடிதில்லிசெங்கோட்டையில் தேசியக் கொடியைஏற்றிவைத்துநாட்டுமக்களுக்குஉரையாற்றுகிறார்.

இதனையொட்டி, தலைநகர் தில்லியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

தில்லிமாநகர் முழுவதும் பாதுகாப்பு வளையத்திற்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

செங்கோட்டையைச் சுற்றிலும் ஆயிரக்கணக்கானகாவலர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பு காரணங்களுக்காக, நாளைகாலை 4 மணிமுதல் காலை 10 மணிவரைஎட்டுமுக்கியசாலைகளில் போக்குவரத்துமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இன்றிரவு 10 மணிமுதல் தில்லியின் முக்கியபகுதிகளுக்கு, வர்த்தகவாகனங்கள் செல்லதடைவிதிக்கப்பட்டுள்ளது.

மெட்ரோரயில் நிலையங்களிலும் உரியபாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகதகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழகத்தில், சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையில் முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், தேசியக் கொடியைஏற்றிவைத்துஉரையாற்றவுள்ளார்.

இந்நிகழ்ச்சியில், காவலர்களுக்கானபதக்கங்களைமுதலமைச்சர் வழங்கவுள்ளார்.

>>>><<<<

சுதந்திரதினத்தைமுன்னிட்டுதேசியஅளவில் காவல்துறைவிருதுகளைஉள்துறைஅமைச்சகம் அறிவித்துள்ளது. ஆயிரத்து 82 பேர் இந்தவிருதுகளுக்குதேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாகஉள்துறைஅமைச்சகம் வெளியிட்டுள்ளசெய்திக்குறிப்பில் 347 பேருக்குவீரதீரசெயல்களுக்கானவிருதுவழங்கப்படுவதாகதெரிவிக்கப்பட்டுள்ளது.

87 பேர் குடியரசுத் தலைவரின் விருதுக்கும் 648 பேர் சிறப்பாகபணியாற்றியதற்கானவிருதுக்கும் தேர்வு செய்யப்பட்டுள்ளதாகஅதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>><<<<

தமிழகதீயணைப்புத்துறைவீரர்கள், சிறைத்துறையினர் மற்றும் ஊர்க்காவல் படைவீரர்களுக்குகுடியரசுத் தலைவர் பதக்கங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தைச் சேர்ந்ததீயணைப்புத் துறைவீரர்கள் திரு. ஆறுமுகம் ராமச்சந்திரன், திரு. கூத்தன் பஞ்சவர்ணம், திரு. பரமசிவம் கந்தசாமி, திரு. ரெங்கராஜன் ராமச்சந்திரன் ஆகியோர் பதக்கங்களைபெறுகின்றனர்.

ஊர்க்காவல் படைவீரர்கள் திரு. ஜோக்கப் விட்டோ, திரு. ராதாரமணன் ஆகியோர் குடியரசுத் தலைவர் பதக்கங்களைபெறுகின்றனர்.

சிறைக்காவல் துறையைச் சேர்ந்ததிரு. ஜவஹர், திரு.சங்கரராமகிருஷ்ணன் ஆகியோர் குடியரசுத் தலைவரின் சீர்திருத்தசேவைபதக்கத்தைபெறவுள்ளனர்.

>>>><<<<

சுதந்திரப்போராட்டவீரர் ஒண்டிவீரனின் தபால் தலை, அவரதுநினைவு தினமான இம்மாதம் 20ஆம் தேதி, திருநெல்வேலிமாவட்டம், பாளையங்கோட்டையில் வெளியிடப்படும் என்றுமத்தியதகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர். எல். முருகன் தெரிவித்துள்ளார்.

75வது விடுதலைப்பெருவிழாவைஒட்டிசென்னையில் இன்றுதமிழ்நாடுபெட்ரோலியவிற்பனையாளர்கள் சங்கம் ஏற்பாடுசெய்திருந்தநிகழ்ச்சியில், தேசியக்கொடியைஏற்றிவைத்து, பொதுமக்களுக்குதேசியக் கொடிகளைவழங்கிப்

பேசியஅமைச்சர், பிரதமரின் அழைப்பைஏற்றுதமிழகமக்களும் தங்கள் வீடுகள், கடைகள் மற்றும் அலுவலகங்களில் மூவண்ணக் கொடியைஏற்றி, ஆதரவளித்துவருவதற்குதமதுபாராட்டுகளைதெரிவிப்பதாககூறினார்.

தேசியக்கொடிக்குதமது இன்னுயிரைஅளித்தகொடிகாத்ததிருப்பூர் குமரனின் தியாகத்தையும், இந்நாளில் நினைவுகூருவோம் என்றும் மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறினார்.

>>>><<<<

இல்லம் தோறும் தேசியக்கொடிஏற்றும் இயக்கம் தமிழகத்திலும் உற்சாகமாககொண்டாடப்பட்டுவருகிறது,

பொதுமக்கள் தங்கள் வீடுகளிலும், வணிகநிறுவனங்களிலும் தேசியக்கொடியைஏற்றி தங்களதுமகிழ்ச்சியைவெளிப்படுத்தினர்.

தனியார் வாகனங்கள் மற்றும் டாக்ஸி ஆட்டோக்களும் தேசியக்கொடியுடன் வலம் வந்துகொண்டிருக்கின்றன.

சென்னைதுறைமுகத்திலும், பெசண்ட் நகர் கடற்கரையிலும் தேசியக்கொடிஏற்றும் இயக்கத்திற்குவலுசேர்க்கும் வகையில் மத்தியகப்பல் போக்குவரத்துதுறைஅமைச்சர் திரு. சர்பானந்தாசோனாவால் தேசியக்கொடியைகையில் ஏந்தி, பிரச்சாரம் மேற்கொண்டார்.

இதுதொடர்பாகஅவர் வெளியிட்டுள்ளட்விட்டர் செய்தியில், இந்த இயக்கத்தில் தாம் பங்கேற்றிருப்பதுமிகுந்தமகிழ்ச்சிஅளிப்பதாககூறியுள்ளார்.

கடற்கரைகளை தூய்மையாகபராமரிப்பது, நமதுகடமைஎன்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பெசண்ட்நகர் கடற்கரையில் நடைபெற்றநிகழ்ச்சியில், மாணவர்களும், பொதுமக்களும் தேசியக்கொடியைகையில் ஏந்திமத்தியஅமைச்சருடன் பேரணியில் கலந்துகொண்டனர்.

திருவள்ளூரில் இன்றுநடைபெற்றதேசியக்கொடிபேரணியில் மத்தியதகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திருமுருகன் மற்றும் பிஜேபிதொண்டர்கள் பங்கேற்றனர்.

தேசியக்கொடிஏற்றும் இயக்கத்தைசிறப்பிக்கும் வகையில் கல்லூரி ஆசிரியர்களும், தேசியமாணவர் படையினரும் இணைந்துதயாரித்த 75 அடிநீளதேசியக் கொடி இன்றுசேலத்தில் பறக்கவிடப்பட்டது.

இதுகுறித்தவிவரங்களைநிகழ்ச்சியின் அமைப்பாளர் திரு. சொக்குவள்ளியப்பன் எமதுசெய்தியாளரிடம் தெரிவித்தார்.

நாகைமாவட்டம் நாகூர் தர்கா மூவண்ணவிளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு இரவில் வண்ணமயமாககாட்சியளிப்பதாகஎமதுசெய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>><<<<

நாட்டின் 75வது விடுதலைப் பெருவிழாவில் மூவண்ணக் கொடியுடன் விடுதலைக்காகபாடுபட்டதியாகிகளைபோற்றுவோம் என்றுதிமுகதலைவரும், முதலமைச்சருமானதிரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

இந்தியஅளவில் தமிழகம் உள்ளிட்டஅனைத்துமாநிலங்களும் ஒன்றிணைந்து, விடுதலைப் பெருவிழாவைசிறப்பாககொண்டாடுவோம் என்று இன்றுஅவர் வெளியிட்டுள்ளஅறிக்கைஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

>>>><<<<

தமிழகத்தில் பள்ளிமாணவர்களுக்கானஅடிப்படைதேவைகளை பூர்த்திசெய்யவும், கல்வித்தரத்தைமேம்படுத்தவும், நடப்பாண்டில் கூடுதல்நிதிஒதுக்கப்பட்டு, பலதிட்டங்கள் செயல்படுத்தப்பட்டுவருவதாகநகர்ப்புற வளர்ச்சித்துறைஅமைச்சர் திரு. கே.என் நேருகூறியுள்ளார்.

சேலத்தில் மாணவமாணவியருக்குவிலையில்லாமிதிவண்டிகளைவழங்கிப் பேசியஅமைச்சர், கல்வித்தரம், மாணவர்களின் நலன் போன்றவற்றைஉருவாக்கித் தருவதற்குஅரசுதனிக்கவனம் செலுத்திவருவதாகதெரிவித்தார்.

பள்ளிகளின் கட்டமைப்பைமேம்படுத்தி, பள்ளிகளைதரம் உயர்த்துவதற்கானநடவடிக்கைகளையும் அரசுமேற்கொண்டுள்ளதாககூறினார்.

அரசுஉதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்குவிலையில்லாமிதிவண்டிகள் வழங்கப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

**>>>><<<<**

75வது சுதந்திரதினஅமுதப் பெருவிழாவின் ஒருபகுதியாக, பிஜேபிமாநிலத் தலைவர் திரு. அண்ணாமலை, ராமேஸ்வரத்தில் விசைப் படகுகளில் தேசியக்கொடியைஏற்றி, கடற்பயணம் மேற்கொண்டார்.

75 படகுகளில் ராமேஸ்வரத்திலிருந்துதனுஷ்கோடிஅருகேயுள்ளகோதண்டராமர் கோவில் வரைபயணம் மேற்கொண்டஅவர், மீனவர் சங்கப் பிரதிநிதிகளையும் சந்தித்து, அவர்களின் குறைகளைகேட்டறிந்தார்.

இலங்கைகடற்படையால் சிறைபிடிக்கப்பட்டதமிழகமீனவர்களைவிரைவில் மீட்டுவர, பிரதமர் திரு. நரேந்திரமோடிதலைமையிலானமத்தியஅரசுதொடர் நடவடிக்கைகளைமேற்கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 60 மீனவர்களை தூதரகம் மூலம் மீட்கநடவடிக்கைஎடுக்கப்பட்டுவருவதாகவும் திரு. அண்ணாமலைகுறிப்பிட்டார்.

**>>>>END<<<<**